an International CBSE Finger Print School
Coimbatore

# அகநானூறு

வினாவிடை

1. நாவாயின் தோற்றத்தையும், செல்லும் விதத்தையும் அகநானூறு எவ்வாறு காட்சிப்படுத்துகிறது?

- உலகம் புடைபெயர்ந்தது போன்ற தோற்றத்தை உடையது நாவாய்.
- அது புலால் நாற்றமுடைய கடலின் நீரைப் பிளந்து கொண்டு செல்லும்.
- வீசுகின்ற காற்றானது நாவாயை அசைத்துச் செலுத்தும்.
- கலங்கரை விளக்கத்தின் ஒளியால் திசை அறிந்து நாவாய் ஓட்டுபவன் நாவாயைச் செலுத்துவான்.

2. அகநானூறு குறிப்பு எழுதுக

- அகநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.
- புலவர் பலரால் பாடப்பட்ட நானூறு பாடல்களைக் கொண்டது.
- இந்நூலினை நெடுந்தொகை என்றும் அழைப்பர்.

3. எட்டுத்தொகை நூல்கள் குறித்து எழுதுக.

- நற்றிணை
- குறுந்தொகை
- ஐங்குறுநூறு
- பதிற்றுப்பத்து
- பரிபாடல்
- கலித்தொகை
- அகநானூறு
- புறநானூறு.

4. மருதன் இளநாகனார் குறிப்பு வரைக.
    - மருதன் இளநாகனார் சங்ககாலப் புலவர்களுள் ஒருவர்.
    - கலித்தொகையின் மருதத்திணையில் உள்ள முப்பத்து ஐந்து பாடல்களையும் பாடியவர் இவரே.
    - மருதத்திணை பாடுவதில் வல்லவர் என்பதால் மருதன் இளநாகனார் என அழைக்கப்படுகிறார்.